## அண்ணா பல்கலைக்கழக மாணவி வழக்கில் 157 நாட்களில் தீர்ப்பை பெற்றுத் தந்திருக்கிறோம்! பொள்ளாச்சி பாலியல் வழக்கில்

# எடப்பாடி பழனி சாமி ஆட்சி குற்றவாளிகளுக்கு துணை போனதை நாடே அறியும்!

## நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி அறிக்கை!

**சென்னை, மே 29 -**

**தமிழகக் காவல்துறை விசாரித்த அண்ணா பல்கலைக்கழக மாணவி வழக்கில் 157 நாளில் தீர்ப்பைப் பெற்றுக் கொடுத்திருக்கிறோம்! என்றும்,**

**சிபிஐ விசாரித்த பொள்ளாச்சி பாலியல் வழக்கு ஆறரை ஆண்டுகள் நடைபெற்றது!**

**2019 முதல் 2021 மே வரையில் எடப்பாடி பழனிசாமி ஆட்சியில் பொள்ளாச்சி பாலியல் வழக்கை நடத்திய லட்சணத்தையும் குற்றவாளிகளுக்கு துணை போனதையும் இந்த நாடறியும் என்றும்**

**கழகத் துணைப் பொதுச்செயலாளரும், நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி எம்.பி. அறிக்கையில் தெரிவித்துள்ளார்.**



இது குறித்து கனிமொழி கருணநிதி எம்.பி.யின் அறிக்கை வருமாறு:

அண்ணா பல்கலைக்கழக மாணவி பாலியல் வழக்கில் கைதான ஞானசேகரன் மீது சுமத்தப்பட்ட 12 குற்றச்சாட்டுகளில், 11 குற்றச்சாட்டுகள் நிரூபணமாகி உள்ளதாக சென்னை மகளிர் நீதிமன்றம் தீர்ப்பு அளித்திருக்கிறது. ஜூன் 2ம் தேதி தண்டனை விவரங்களை அளிப்பதாக நீதிபதி அறிவித்திருக்கிறார்.

**துரிதமாக குற்றப் பத்திரிக்கை தாக்கல்!**

கடந்த டிசம்பரில் நடந்த நிகழ்வில் மிகத் துரிதமாகக் குற்றவாளியைக் கண்டுபிடித்து, குற்றப்பத்திரிகையைத் தாக்கல் செய்து, வழக்கு விசாரணையைமுடித்து, குற்றவாளிக்குத் தண்டனையையும் பெற்றுக் கொடுத்திருக்கிறது தமிழகக் காவல் துறை.

அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் கடந்த டிசம்பர் 23ம் தேதி அதே பல்கலைக்கழக மாணவி ஒருவர் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டார். உடனே குற்றவாளி ஞானசேகரனை போலீஸ் கைது செய்தது. 3 பெண் ஐ.பி.எஸ் அதிகாரிகள் கொண்ட சிறப்புக் குழு, வழக்கை விசாரித்தது. பாலியல் வழக்கு மட்டுமல்லாது, ஏற்கெனவே ஞானசேகரன் மீதான திருட்டு, ஆள் கடத்தல், வீடு புகுந்து கொள்ளையடித்தல் உள்ளிட்ட பல வழக்குகளையும் காவல் துறை விசாரித்தது. மார்ச் மாதம் முதல் விசாரணை தொடங்கியது. தினந்தோறும் என்ற அடிப்படையில் ஏப்ரல் 23ம் தேதி முதல் சாட்சிகள் விசாரணை நடைபெற்றது. பாதிக்கப்பட்ட மாணவி உள்பட 29 பேர் சாட்சியம் அளித்தனர். 75 சான்று ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டன.

சம்பவம் நடந்த நாளிலிருந்து சரியாக 157ஆவது நாளில் குற்றவாளியின் தண்டனையை உறுதி செய்திருக்கிறது தமிழகக் காவல் துறை. இந்த வழக்கில் சென்னை உயர் நீதிமன்றத்தில், சி.பி.ஐ. விசாரணையை கேட்ட போது, 'சி.பி.ஐ. விசாரணை தேவையில்லை' என டி.ஜி.பி. அறிக்கை தாக்கல் செய்தார். சி.பி.ஐ. கூட இவ்வளவு துரிதமாக விசாரித்திருக்க முடியுமா? எனக் கேட்கும் அளவுக்கு இந்த வழக்கைத் தமிழகக் காவல் துறை மிகச் சிறப்பாக நடத்தி குற்றவாளியின் குற்றத்தை நிரூபித்திருக்கிறது.

இந்த வழக்கு தொடர்பாகக் கடந்த ஜனவரி 8ம் தேதி சட்டமன்றத்தில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பேசும்போது, "இந்த வழக்கின் குற்றவாளி மீது தயவுதாட்சணியம் இல்லாமல் காவல்துறை நடவடிக்கை எடுக்கும். இந்த வழக்கில் 60 நாட்களுக்குள் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்படும். விரைவு நீதிமன்றத்தில் விசாரணை நடத்தப்பட்டு, குற்றவாளிக்கு உச்சபட்சத் தண்டனை கிடைக்கும்'' என்று சொன்னார். அதனைச் செய்து காட்டியிருக்கிறார்.

**அண்ணா பல்கலைக் கழக மாணவி வழக்கை ஒப்பிட்டுப் பாருங்கள்!**

அண்ணா பல்கலைக்கழக மாணவி வழக்கில் தீர்ப்பு வெளியாவதற்கு 15 நாட்களுக்கு முன்புதான், பொள்ளாச்சி பாலியல் வழக்கில் 9 பேருக்குச் சாகும் வரை ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. அந்த வழக்கோடு அண்ணா பல்கலைக்கழக மாணவி வழக்கையும் கொஞ்சம் ஒப்பிட்டுப் பாருங்கள்.

எடப்பாடி பழனிசாமி ஆட்சியில் நடந்த பொள்ளாச்சி பாலியல் வழக்கு நாட்டையே உலுக்கியது. பொள்ளாச்சி பாலியல் குற்றச் சம்பவம் கடந்த 2016ம் ஆண்டு முதல் 2018ம் ஆண்டு வரை நடைபெற்றாலும், 2019ம் ஆண்டுதான் வெளிச்சத்துக்கு வந்தது. அன்றைக்குத் திமுக உள்ளிட்ட எதிர்க்கட்சிகளும் ஊடகங்களும் பொள்ளாச்சி பாலியல் வழக்கை வெளிக் கொணராமல் போயிருந்தால் அன்றைய எடப்பாடி பழனிசாமி அரசு விவகாரத்தை மூடி மறைத்திருக்கும். அ.தி.மு.க.வினர் சம்பந்தப்பட்டிருந்ததால் வழக்கைப் பதியாமல் இழுத்தடித்ததோடு பாதிக்கப்பட்ட மாணவியின் அண்ணனையே தாக்க முயன்றார்கள்.

**பொள்ளாச்சி வழக்கு கடந்து வந்த பாதை!**

பொள்ளாச்சி பாலியல் வழக்கு கடந்த வந்த பாதையைக் கொஞ்சம் திரும்பிப் பாருங்கள்.

2019 பிப்ரவரி 24 கல்லூரி மாணவி புகார் அளித்தார். வழக்குப் பதிவு செய்து 3 பேரைக் கைது செய்தனர்.

2019 மார்ச் 4 முக்கிய குற்றவாளி திருநாவுக்கரசு கைது.

2019 மார்ச் 12 சி.பி.சி.ஐ.டி.க்கு வழக்கு மாற்றம்.

2019 ஏப்ரல் 27 வழக்கு சி.பி.ஐ.க்கு மாற்றம்.

2019 மே 21 முதல் குற்றப்பத்திரிகை தாக்கல்.

2021 ஜனவரி 6 இறுதி குற்ற ப்பத்திரிகை தாக்கல்.

2023 பிப்ரவரி 24 சாட்சி விசாரணை தொடங்கியது.

2024 பிப்ரவரி 23 - குற்றவாளிகள், சாட்சியங்களிடம் தினமும் விசாரணை நடைபெற்றது.

2025 மே 13 - தீர்ப்பு.

2019 பிப்ரவரி தொடங்கி 2025 மே மாதம் வரையிலான ஆறரை ஆண்டுகள் பொள்ளாச்சி பாலியல் வழக்கு நடைபெற்றது. இத்தனைக்கும் அந்த வழக்கை விசாரித்தது சி.பி.ஐ. ஆனால், அண்ணா பல்கலைக்கழக வழக்கை விசாரித்தது தமிழகக் காவல் துறை. பொள்ளாச்சி பாலியல் வழக்கில் நியாயம் கிடைக்க ஆறரை ஆண்டு ஆனது. அண்ணா பல்கலைக்கழக மாணவி வழக்கில் 157 நாளில் தீர்ப்பைப் தீர்ப்பை பெற்றுக் கொடுத்திருக்கிறோம். 2019 முதல் 2021 மே வரையில் எடப்பாடி பழனிசாமிதான் ஆட்சியில் இருந்தார். பொள்ளாச்சி பாலியல் வழக்கை அவர் நடத்திய லட்சணத்தை இந்த நாடறியும்.

இவ்வாறு கனிமொழி கருணாநிதி எம்.பி. அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

---

## முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெறுகிறது! மதுரையில் வரலாறு படைக்கும்

# கழக பொதுக்குழு கூட்டத்திற்கான பிரம்மாண்டமான ஏற்பாடுகள் தீவிரம்!

மதுரை, மே 29-

மதுரையில் வரும் 1ஆம் தேதி வரலாற்றுச் சிறப்புமிக்க கழகப் பொதுக்குழு கூட்டம் நடைபெறும் என கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்திருந்தார், அதனை தொடர்ந்து பிரம்மாண்டமாக, வரலாற்று புகழ் பெறும் வகையில் இந்தியாவில் இதுபோல் எந்த ஒரு பொதுக்குழு கூட்டமும் நடைபெறவில்லை என்பதை மெய்ப்பிக்கும் வகையில் பல்வேறு புதிய கலை நுணுக்கத்துடன் சிறப்பு அம்சங்களுடன் இரவு பகலாக மதுரை வடக்கு மாவட்டச் செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி கண்காணிப்பில் சிறப்பாக செய்து வருகின்றனர். அதன் விபரம்



கழகத் தலைவர், தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மதுரை பொதுக்குழு கூட்டம் தமிழ்நாட்டில் மிகப்பெரிய மாற்றத்தை உருவாக்கக்கூடிய சக்தியாக அமையும் என்ற எதிர்பார்ப்புகளுடன் மதுரையில் உள்ள உத்தங்குடி கலைஞர் திடலில் பொதுக்குழு கூட்டம் நடத்த தீர்மானித்தார்.

அதன்படி பொதுக்குழு கூட்டத்திற்கான ஏற்பாடுகளை தலைமைக் கழக வழிகாட்டுதலின்படி மதுரை வடக்கு மாவட்டச் செயலாளர், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி மேற்கொண்டு வருகிறார். பிரமாண்ட மாகவும், இது வரையில் இது போன்று வேறு எங்கும் அமைந்திடாத வகையில் முற்றிலும் குளிரூட்டப்பட்ட வசதியுடன் கூடிய பிரம்மாண்டமான பொதுக்குழு கூட்ட அரங்கம் பிரத்தியேக கலை நுணுக்கத்துடனும் பொதுக்குழு அரங்கில் வண்ண விளக்குகளுடன் அமை கிறது.

அதற்கு அருகில் பொதுக்குழுவில் பங்கேற்க வரும் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் எளிதில் பொதுக்குழு அரங்கிற்குச் செல்லும் வகையில் சுமார் 13க்கும் மேற்பட்ட அரங்கம் அமைத்து அங்கு வைக்கப்பட்டுள்ள மாவட்ட பெயர்கள் பார்த்து பதிவு செய்து எளிதில் அனுமதி பெற்று பொதுக்குழு அரங்கிற்குள் உள்ளே செல்ல வசதியாக ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது.

இதற்கு அடுத்தபடியாக மாபெரும் அரங்கில் பொதுக்குழுவில் பங்கேற்றவர்கள் மதுரை மாவட்டத்திற்கு உரித்தான அமைச்சர் பி.மூர்த்தி யின் வழக்கம் போல் ஏற்பாடு செய்யும் பல்வேறு உயர்ரக சைவ, அசைவ வகை உணவுகள், மதுரை ஜிகர்தண்டா, சோழவந்தான் கொழுந்து வெற்றிலை பீடா என என்றும் மதுரை மண்ணின் உணவுகள் மனதில் நிலைத்திருக்கும் வகையில் ஏற்பாடுகள் செய்யப் படுகிறது.

பொதுக்குழு அரங்கத்திற்கு முன்பாக கழகத் தலைவர், முதல்வர் அவர்களால் இரு வண்ணக் கொடி ஏற்றும் வகையில் 100 அடி உயர கம்பம் கம்பீரத் தோற்றத்தில் அமைய உள்ளது,

பொதுக்குழு அரங்கின் முன்பாகவும், 100 அடி கொடிக்கம்பம் சுற்றியும் முகப்பு தோற்றம் முழுவதும் பசுமையான புல்வெளிகள், பூத்துக் குலுங்கும் வண்ண மலர்களால் அலங்கரிக்கப்பட்டு வருகின்றது

மேலும் எல்லோர் பார்வையும் ஈர்க்கும் வகையில் செயற்கை நீரூற்று அமைக்கும் பணியும் நடை பெற்று வருகின்றது. மதுரை முழுவதும் சுமார் 60 கிலோ மீட்டர் சுற்றளவில் சாலையின் இரு புறங்களிலும் இரு வண்ணக் கொடி திராவிட மாடல் ஆட்சியின்பெருமையை கூறும் வகையில் பட்டொளி வீசி எல்லோரையும் கவரும் வகையில் அமைய உள்ளது.

பொதுக்குழுவில் பங்கேற்க வருபவர்கள் எளிதில் வந்து செல்ல ஏதுவாக சாலை மற்றும் போக்குவரத்து வசதி மற்றும் நடமாடும் கழிப்பறை வசதி, வாகனங்கள் போதுமான அளவுக்கு நிறுத்தும் வகையில் பார்க்கிங் வசதி என இதுவரை யாரும் காணாத வகையில் இனிமேல் இதுபோன்று அமையுமா என எல்லோரும் ஆச்சரியத்துடன் கூறும் வகையில் பொதுக்குழு மற்றும் மாபெரும் ரோடு ஷோ நிகழ்ச்சிகளுக்கான வரவேற்பு ஏற்பாடுகள் வெகு சிறப்பாக நடைபெற்று வரும் நிலையில் பணிகள் 90 சதவீதம் முடிந்துள்ளது.

விரைவில் முழுமை பெற்று காண்போர் எல்லோரையும் மெய்சிலிர்க்க வைக்கும் வகையில் இப்பொதுக்குழு கூட்டம் தமிழ்நாட்டின் உச்சத்தை தொட்டு வரும் 2026 தேர்தல் முழு வெற்றிக்கு மாபெரும் உந்து சக்தியாக அமையும் என்பதில் மாற்றமில்லை.

---

## மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. ஆலோசனை வழங்குகிறார்!

# சென்னை வடக்கு மாவட்ட இளைஞர் அணி ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்ட அமைப்பாளர் ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

*சென்னை, மே 28-*

*சென்னை வடக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜே.ஜே. எபினேசர் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-*

*சென்னை வடக்கு மாவட்ட இளைஞர் அணி மாவட்ட துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் ஆலோசனை கூட்டம் நாளை (29.5.2025 - வியாழக்கிழமை) மாலை 4.00 மணியளவில் இராயபுரம் அறிவகத்தில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜே.ஜே. எபினேசர் எனது தலைமையில், மாவட்ட துணை அமைப்பாளர்கள் லயலோ. கே.மதன், வை.கௌதமன், இர.பொன் இளவரசன், கட்பீஸ்.ப. சோமசுந்தரமூர்த்தி, இ.ரவிகுமார் ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது.*

*இக்கூட்டத்தில் சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்குகிறார்.*

*இக்கூட்டத்திற்கு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் பெரம்பூர், ஆர்.கே.நகர், இராயபுரம் பகுதியை சார்ந்த பகுதி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.*

*பொருள்: முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் விழா, கழக ஆக்க பணிகள்.*

*இவ்வாறு அவர் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.*

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### திருமதி தையல்நாயகி முத்துசாமி
### மே 29 (2001)



**சென்னை, துறைமுகம் பகுதிக் கழக மகளிர் அணி அமைப்பாளராகவும் – சிவகங்கை மாவட்டக் கழக மகளிர் அணி அமைப்பாளராகவும் பணியாற்றியவர்.**

**இந்தி எதிர்ப்புப் போராட்டம் – பானை உடைப்புப்போராட்டம் – நீதிகேட்டு நெடும் பயணம் போன்ற கழகம் நடத்திய போராட்டங்களில் பங்கேற்றவர்.**

**பால்கமிஷன் அறிக்கை தொடர்பாக தலைவரை அவரது இல்லத்தில் கைது செய்ய முற்பட்டபோது, காவல்துறை வாகனம் முன்பு படுத்து மறியல் செய்து, தடியடிக்கு ஆளாகி மருத்துமனையில் அனுமதிக்கப்பட்டவர்.**

**இருதய அறுவை சிகிச்சை செய்து கொண்ட நிலையில் காரைக்குடியில் சித.சிதம்பரம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற ஈழத் தமிழர் ஆதரவு ரயில் மறியல் போராட்டத்தில் பங்கேற்று சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

---

## பொதுக்குழு உறுப்பினர் களக்காடி எல்லப்பன் தலைமை!

## பகுதிச் செயலாளர்கள் எம்.கிருஷ்ணமூர்த்தி இரா.துரைராஜ் முன்னிலை!

# சைதை ஜாபர்கான் பேட்டையில் முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள் விழா!

## திருவுருவச் சிலைக்கு – அமைச்சர் மா.சுப்பிரமணியன் மாலை அணிவித்து மரியாதை!

*சென்னை, மே 29-*

*சைதை மேற்கு பகுதி தி.மு.க சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்தநாளை முன்னிட்டு கலைஞர் அவர்களின் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தும் நிகழ்ச்சி பொதுக்குழு உறுப்பினர் களக்காடி எல்லப்பன் ஏற்பாட்டில், 3.6.2025 செவ்வாய்க்கிழமை அன்று காலை 6.30 மணிக்கு, ஜாபர்கான் பேட்டை, கங்கையம்மன் கோவில் அருகில் நடைபெறுகிறது.*

*நிகழ்ச்சிக்கு பொதுக்குழு உறுப்பினர் களக்காடி எல்லப்பன் தலைமை வகிக்கிறார். பகுதிச் செயலாளர்கள் எம். கிருஷ்ணமூர்த்தி, இரா. துரைராஜ் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.*

*முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாவட்டச் செயலாளர் அமைச்சர் மா.சுப்பிரமணியன் மாலை அணிவித்து மரியாதை செலுத்துகிறார்.*

*மேலும் இந் நிகழ்ச்சியில் தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி. துணை மேயர் மு.மகேஷ் குமார், எஸ்.குணசேகரன் சைதைமா.அன்பரசன், வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன், மின் கந்தப்பன், ப. சுப்பிரமணி . தா.மோகன் குமார். எம்.எஸ்.ஹரிபாபு, சைதை சாதிக், வி.பி.ஜானகிராமன், த.சம்பத், ஆர். ரமேஷ், கபிதாகௌதமன், கமலநாதன், சை.மு.சேகர், ந.தமிழரசு, எஸ்.பி. கோதண்டம், எம்.நாகா, நா.மணிகண்டன், ஆர் கிருஷ்ணகுமார், அஞ்சலராமன், கோ.பாஸ்கரன், ராமச்சந்திரன், வி.மதி வாணன், என்.சிவமணி, த.மணி, கு.புகழ்வேந்தன். பொன். ஐஜெய்சிங், ஏ.ரவி, ஆர்.ரவி, ஜி.பாபு, ஆர்.எல்.காந்தன், எம். எஸ்.மணி, என்.தீனதயாளன், வெ.புருஷோத்தமன், நரேஷ்குமார், பிரபு, விக்னேஷ், எஸ்.மல்லிகா, சரவணன், பாஸ்கர், இரா. சத்யா, எஸ்.அருண், மு. கதிரவன், பொ.பரத் குமார், பி.எல்.முருகன், அ.அயாத்பாஷா, சாந்தி சசுந்தரம், எல்.சந்திரன், சி.டி.காசிநாதன், து. முரளி, வி.சபரி, அ.சுப்பிரமணி, இ.வரதன் மா.ஏழுமலை, பி.எஸ்.பிரகாஷ், சுமதி தீனதயாளன், பூபதி வெங்கடேசன், ஜி.ஏழுமலை,பிரகாஷ், டி.சுரேஷ் பாபு வி.கோபால கிருஷ்ணன், எஸ்.முகமஅலி, என்.ராஜேஷ் மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர். பாபு எல்லப்பன், சைதை திலீபன், மதிவாணன், வ.ராஜா, இ.விமல், கொடி.எல். மணி, ஆர்.வி.நகர் பா. ராஜேஷ், ப.ராகுல் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.*

---

# ஒழுங்கு நடவடிக்கை!

## தலைமைக் கழக அறிவிப்பு!

மதுரை மாநகர் மாவட்டம், 57வது வார்டைச் சேர்ந்த பொன்வசந்த் கழகக் கட்டுப்பாட்டை மீறியும், கழகத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வகையிலும் செயல்பட்டு வந்ததால், அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்பிலிருந்தும் தற்காலிகமாக நீக்கி (Suspension) வைக்கப்படுகிறார்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018
நாள்- 28.5.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

---

# சென்னை கிழக்கு மாவட்டம்

# 104ஆ-வது மற்றும் 75அ-வது ஆகிய வட்டக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

## தலைமைக் கழக அறிவிப்பு!

சென்னை கிழக்கு மாவட்டம், வில்லிவாக்கம் மேற்கு பகுதி, 104ஆ-வது வட்டச் செயலாளர் ஜெ.தங்கராஜ் மறைவெய்திய காரணத்தால், கழகப் பணிகள் செவ்வனே நடைபெற, திரு. **கே.எஸ்.பாபு,** (ஏபி-380, ஐ-பிளாக், 3வது தெரு, அண்ணாநகர் மேற்கு, சென்னை -600040) அவர்கள் 104ஆ-வது வட்டக் கழகப் பொறுப்பாளராகவும்;

திரு.வி.க.நகர் தெற்கு பகுதி, 75அ-வது வட்டச் செயலாளர் த.சின்னதுரை மறைவெய்திய காரணத்தால், கழகப் பணிகள் செவ்வனே நடைபெற, திரு. **பா.பி.தாஸ்,** (51, எஸ்.எஸ்.புரம், ஏபிளாக், 10வது தெரு, ஓட்டேரி, சென்னை600012) அவர்கள் 75அ-வது வட்டக் கழகப் பொறுப்பாளராகவும் நியமிக்கப்படுகிறார்கள்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட அந்தந்த வட்டக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவர்களுடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018
நாள்- 28.5.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.